11.06.2024

<u>கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.</u>

<u>அமர்வு வழக்கு எண். 205/2018</u>

அ.சா. 19

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சரோஜா | | |
| க/பெ | துரை | | |
| கிராமம் | சித்தேரிக்கரை | தொழில் | |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 48/2024 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

**இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.**

**<u>முதல் விசாரணை</u>**

**நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது** விழுப்புரத்தில் வீட்டு வேலை செய்து குடித்தனம் நடத்தி வருகிறேன். என் கணவர் துரை விழுப்புரம் இரயில் நிலையத்தில் நடைமேடையில் தள்ளுவண்டியில் வைத்து தின்பண்டங்கள் வியாபாரம் செய்து வருகிறார். 10 வருடத்திற்கு முன்பு என் வீட்டுகாரரை விழுப்புரம் இருப்பு பாதை காவல் நிலையத்தில் வைத்திருப்பதாக என் கணவர் வேலை செய்யும் கேன்டீனின் உரிமையாளர் அலைபேசியில் தகவல் தெரிவித்தார். என் சின்னமாமனார் மூர்த்தி என்பவரை காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து என் கணவரை காவல் நிலையத்தில் இருந்து அழைத்து செல்ல முயற்சி செய்தேன். இனிமேல் அவ்வாறு சம்பவம் ஏதும் நடை பெறாது என எழுதி கொடுத்துவிட்டு என் கணவரை கூப்பிட்டு சென்று விட்டேன். நான் போகும்போது எவ்வளவு நேரம் இருக்கும் என்று ஞாபகம் இல்லை. நான் காவல் நிலையத்திற்கு வெளியில் எதுவும் பார்க்கவில்லை. இதுசம்மந்தமாக என்னை காவல் துறையினர் மற்றும் நீதித்துறை நடுவர் யாரும் விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.)**

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

கடந்த 07.05.2014ம் தேதி காலை சுமார் 9.30 மணியளவில் நானும் எனது சின்னமாமனாரும் காவல் நிலையம் போகும்போது அந்த பக்கமாக போங்கம்மா என்று காவலர்கள் விரட்டியதாகவும், என்னதான் நடக்கிறது என்று நான் நின்று வேடிக்கை பார்த்தபோது ஒரு வெள்ளை கலர் போலீஸ் வண்டி வந்து காவல் நிலையத்திற்கு முன்பு நின்றதாகவும், அப்போது 3 போலீசார், சட்டை இல்லாமல் வெறும் கைலியுடன் தலை தொங்கிய நிலையில் ஒரு நபரை தூக்கி கொண்டு வண்டியில் ஏற்றினார்கள் என்றும், நான் என் கணவர் தானோ என்று பயந்து கொண்டு ஓடி சென்று பார்த்ததாகவும், அது வேறு நபர் என்று தெரிந்து கொண்டதாகவும் காவல் துறை விசாரணையிலும், நீதித்துறை நடுவர் விசாரணையிலும் சொல்லி விட்டு எதிரிகளை காப்பாற்ற உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.

2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.

3 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.

4,5 ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.

**மறுவிசாரணை இல்லை**